(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ), (இ) : நாகர்கோயில், திருவனந்தபுரம் வழித்தடத்தில் 1973 ஜனவரித் திங்கள் முதல் தேதியிலிருந்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையும் : கேரள மாநிலப் போக்குவரத்துக் கழகமும் முறையே மூன்று இரவு நேரப் பேருந்துப் பிரிவுப் பணிகளை இயக்குகின்றன :

முற்பகல் 10·00 திரு. என். டென்னிஸ் : நாகர்கோவில்—திருவனந்தபுரம் ரூட்டில் இப்போது பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, அவர்களின் தேவைக்கேற்றவாறு பஸ்கள் இருப்பதாக இல்லை. ஆதலால் அதிக பஸ்களை அந்த ரூட்டில் விடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தேவைப்படுமானல் அதிக பஸ்கள் விடலாம்.

* 489 வினு: திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகைக்கும் பெங்களூருக்கும் இடையே கூடலூர், குண்டல் பேட்டை, நஞ்சன்கூடு, மைசூர், மாண்டியா, வழியாகவும் கூடலூர், குண்டல்பேட்டை, மைசூர், டீனவள்ளி, கனகாபுரம் வழியாகவும் அரசுப் பேருந்துகள் விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அ. & இ : உதகைக்கும் பெங்களூருக்கும் இடையே மைசூர் வழியாக, மாநிலங்களுக்கு இடையிலான புதிய பேருந்துத் தடம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஒன்று பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. அ. பொம்மன் : நீலகிரி மக்களுக்கு அதிகம் தேவை இருப்பதால் உடனடியாக இந்த பஸ்ஸை விடுவதற்கு மைசூர் அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இந்த வழித்தடம் சம்பந்தமாக சம்மதம் கோரி மைசூர் அரசுக்கு நம் அரசு கடிதம் எழுதியுள்ளது. அதை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். தேவராசன் : சீசன் நெருங்குவதால் பயணிகளின் சௌகரியத்தை முன்னிட்டு உடனடியாக இதை நடத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல யோசனையின்படி விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

THIRU K. S. KOTHANDARAMAIAH : Sir, already there are buses plying between Nilgiri and Mysore and if they are extended upto Sivasamudram and also Bangalore, traffic will increase and Government also will get more income. May I know from the Minister whether that will be expedited ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : It is a fact that by extending the route from Mysore to Bangalore we are likely to get more income. Probably that is one of the reasons for the delay on the part of Mysore Government to agree to the proposal. Anyhow we are having direct talks so that there can be parity for both the States in this route.

திரு ரா. ரா. முனுசாமி : இப்படி பல வழித்தடங்களில் ஓடுகிற பேருந்துகளில் அவை மக்கள் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. எந்த எந்த இடங்களில் பயணிகளுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறதோ அந்த அந்த இடங்களில் அவற்றை மாற்றியமைக்க அரசு முன்வருமா ?

(விடை இல்லை.)

சென்னை-சேலம் பேருந்து வழித்தடம்.

* 490 வினா திரு ந. தருமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னைக்கும் சேலத்திற்கும் இடையே திருக்கோயிலூர் வழியாக ஓடிக்கொண்டிருந்த அரசு விரைவுப் பேருந்து கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னதாக நிறுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்கச் செய்ய எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) திண்டிவனம், விழுப் புரம், மடப்பட்டு, திருக்கோயிலூர், கள்ளக் குறிச்சி, ஆத்தூர் வழியாகச் செல்லும் சென்னை-சேலம் வழித்தடம், திருக்கோயிலூருக்குச் செல்லா மல், திண்டிவனம், விழுப்புரம், மடப்பட்டு, உளுந்தூர்பேட்டை, கள்ளக் குறிச்சி, சேலம், பவானி, பெருந்துறை, அவினாசி வழியாகச் செல்லும் சென்னை-கோயம்புத்தூர் வழித்தடமாக மாற்றப்பட்டுள்ளது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. அ. ஆறுமுகம் : சென்னையில் இருந்து சேலம் செல்கிற பஸ்கள் இப்போது குறைவாக இருக்கின்றன. ஆகவே பிரயாணி கள் சென்று வருவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதை சிறிது அதிகப்படுத்தவேண்டிய அளவிற்கு பஸ்களை விடுவதற்கு அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.